| Aged care services | முதியோர் கவனிப்பு சேவைகள் |
|---|---|
| In Victoria, a broad range of services is available to support your health and well-being as you age. From home support services and other services that help support your independence at home, to residential aged care homes, there are numerous services to support your health and well-being as you age. | உங்களுடைய வயது முதிர்ந்துவரும்போது உங்களுடைய ஆரோக்கியத்தையும் பொதுநலனையும் பராமரிப்பதற்கான பல சேவைகள் விக்டோரிய மாநிலத்தில் உள்ளன. வீட்டில் அளிக்கப்படும் சேவைகள், வீட்டில் நீங்கள் யாரையும் சாராமல் வாழ்வதற்கான சேவைகள் மற்றும் முதியோர் இல்லச் சேவைகள் போன்ற பல சேவைகள் உள்ளன. வயது முதிர்ந்துவரும் காலத்தில் உங்களுடைய உடல்நலனையும் பொதுநலனையும் பராமரிக்க நீங்கள் இந்தச் சேவைகளைப் பயன்படுத்தலாம். |
| We're very fortunate in Victoria to have an extremely comprehensive system of aged care. So people can spend a lot of time living in their own homes. There's multitude of services that can be provided from the community. | விக்டோரிய வாசிகளான நாம் அதிருஷ்டசாலிகள் - பலதரப்பட்ட முதியோர் கவனிப்பு வசதிகள் இங்கு உள்ளன. ஆகவே, வயோதிபர்கள் தமது வீட்டிலேயே அதிக நேரத்திற்குத் தங்கியிருக்கலாம். சமூகத்தினரிடமிருந்து உங்களுக்குக் கிடைக்கக்கூடிய சேவைகள் ஏராளம் உள்ளன. |
| Human beings are meant to socialise and communicate, so it's necessary to be involved in the community, I think. I'm very interested in music. I always say when you retire, you find what you like. You know, there's something for everyone. | மானிடர்கள் என்றால் மற்றவர்களோடு பழகவும் தொடர்பாடல் கொள்ளவும்தான் விரும்புவார்கள், ஆகவே சமூகத்தினரோடு ஈடுபாடு கொள்வது அவசியம் என்றே நான் நினைக்கின்றேன். இசை என்றால் எனக்கு மிகவும் பிடித்தம். ஓய்வு காலத்தில்தான் நீங்கள் விரும்புவது உங்களுக்குக் கிடைக்கும் என்பதே என் கருத்து. ஒவ்வொருவருக்கும் பிடித்த விடயம் என்று ஒன்று உள்ளதுதானே. |
| So as we get older, it's important to maintain good health, and that's not just good medical health, but it's also good social health, doing the things that make you feel good." | ஆகவே எமக்கு வயதாகிக்கொண்டு போகும்போது நமது உடல்நலத்தை நாம் பேண வேண்டும். உடல்நலம் மட்டுமல்ல, மன நலமும் முக்கியம். நல்ல சமூகத் தொடர்புகளும் நமக்கு வேண்டும். உங்களுக்குப் பிடித்த காரியங்களை நீங்கள் செய்யவேண்டும். |



Aged care services © Copyright State of Victoria 2017

As we get older, we face new challenges. So it's a good idea to discuss your plans and wishes for the future with your family or support network, and begin to plan ahead.

எமக்கு வயது ஆக ஆக, நாம் புதிய சவால்களை எதிர்கொள்வோம். ஆகவே, உங்களுடைய எதிர்காலத் திட்டங்கள் மற்றும் விருப்பங்களைப் பற்றிக் குடும்பத்தினரோடு அல்லது ஆதரவுதவிக் குழுக்களோடு பேசி எதிர்காலத்திற்காகத் திட்டமிடுங்கள்.

The key thing is to work with the experts and services that are available, and ask questions to ensure you understand the options available to you.

அனுபவம் மிக்க வல்லுனர்களோடும் கிடைக்கும் சேவைகளோடும் பேசி, உங்களுக்குக் கிடைக்கும் விருப்பத் தெரிவுகளை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டியது மிக முக்கியம்.

The Australian Government provides the majority of aged care services, including services to support you at home, and aged care homes or residential aged care services. My Aged Care is the national gateway for accessing these services.

உங்களது வீட்டில் உங்களுக்கு உதவும் சேவைகள், முதியோர் இல்லங்கள் அல்லது முதியோர் இல்லக் கவனிப்புச் சேவைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய பெரும்பான்மையான முதியோர் கவனிப்புச் சேவைகளை அவுஸ்திரேலிய அரசாங்கம் அளிக்கிறது.

My Aged Care provides assistance with home services, such as domestic help, and if a stay in hospital is necessary, hospital staff can arrange for after-hospital or transition-care services through My Aged Care.

'My Aged Care' என்பது இந்தச் சேவைகளைப் பெறுவதற்கான தலையாய தேசிய வழியாகும். வீட்டு வேலைகள், மருத்துவமனைத் தங்கல்கள் ஆகியவற்றில் 'My Aged Care' உங்களுக்கு உதவும். தேவைப்படும்போது, 'My Aged Care' மூலமாக மருத்துவமனைக்குப் பிறகு தேவைப்படும் கவனிப்பு மற்றும் நிலைமாறு காலக் கவனிப்பை 'My Aged Care' மூலமாக ஏற்பாடு செய்யலாம்.

There are other services to support you to live independently too.

சுதந்திரமாக நீங்கள் வாழ உதவும் மற்ற சேவைகளும் உள்ளன.

Personal alert systems or services can provide you with added confidence to live in your own home. Personal alert systems notify emergency services and caregivers of an accident, such as a fall.

நீங்கள் வீட்டில் சுதந்திரமாக வாழத் தேவைப்படும் தன்னம்பிக்கையை 'அபாய அறிவிப்பு முறைகள்' எனும் சேவைகள் உங்களுக்கு அளிக்கும். உதாரணமாக, நீங்கள் கீழே விழுந்துவிட்டால், அவசரகால சேவைக்கும் உங்களுடைய கவனிப்பாளருக்கும் 'அபாய அறிவிப்பு முறை'



Aged care services © Copyright State of Victoria 2017

| | |
|---|---|
| | இதைத் தெரிவிக்கும். |
| The Victorian Government funds Personal Alert Victoria, a daily monitoring and emergency response service for frail, older Victorians and Victorians with disabilities. | வயது முதிர்ந்த, தளர்ந்த மற்றும் இயலாத முதியோர்களை அன்றாடம் கண்காணித்து அவசரநிலைகளில் உதவும் 'Personal Alert Victoria' எனும் அமைப்பிற்கு விக்டோரிய அரசு நிதியுதவி செய்கிறது. |
| There are also private services that can assist you. | உங்களுக்கு உதவக்கூடிய தனியார் சேவைகளும் உள்ளன. |
| Your GP can advise you and connect you with other health care professionals as needed. | தேவைப்படும்போது, உங்களுடைய ஜி.பி. மற்ற உடல்நல நிபுணர்களுடன் உங்களுக்குத் தொடர்பு ஏற்படுத்திக் கொடுப்பார். |
| Ask your GP about the free annual health assessment for people aged 75 years and over or 55 years and over for Aboriginal and Torres Strait Islanders. | 75 வயதிற்கும் மேற்பட்டோருக்கு, அல்லது 55 வயதிற்கும் மேற்பட்ட பழங்குடியினர் மற்றும் டோரிஸ் நீர்ச்சந்தித் தீவகத்தாருக்கான வருடாந்த உடல்நல மதிப்பீட்டைப் பற்றி உங்களது ஜி.பி-யைக் கேளுங்கள். |
| For many people, it may become difficult to manage all their needs at home. | வீட்டில் தமது அலுவல்கள் அனைத்தையும் செய்வது பெரும்பாலானவர்களுக்குச் சிரமமாக இருக்கும். |
| At this time, residential care is often the choice. | இப்படிப்பட்ட வேளைகளில் முதியோர் இல்லக் கவனிப்பைக் கருத்தில் கொள்ளலாம். |
| For care in an aged care home or residential services, My Aged Care can assist with range of services support. Note that any fees and eligibility for subsidies will be discussed and agreed upon with your service provider before the services are provided. | முதியோர் இல்லக் கவனிப்பு சேவைகளில் My Aged Care பல வழிகளில் உங்களுக்கு உதவ இயலும். நீங்கள் சேவைகளைப் பெறுவதற்கு முன்பாக தள்ளுபடிகள் மற்றும் கட்டணங்களைப் பற்றிய உடன்பாடு ஒன்று உங்களுடன் கலந்துரையாடல் மூலம் ஏற்படுத்தப்படும். |
| You may have to pay something towards the cost of your care. | உங்களது கவனிப்பிற்காக நீங்கள் சிறிது செலவுகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும். |



Aged care services © Copyright State of Victoria 2017

So residential care is, these days, very highly regulated. So there are very stringent standards to make sure that the care you receive is outstanding. Certainly, there are some wonderful residential facilities available that provide excellent care and a loving and welcoming environment.

இல்லக் கவனிப்பு என்பது இக்காலத்தில் மிகவும் ஒழுங்குபடுத்தப்பட்ட சேவையாக மாறியுள்ளது.

ஆகவே, சிறந்த கவனிப்பு உங்களுக்குக் கிடைக்கிறது என்பதை உறுதி செய்வதற்காகப் பல தர நிர்ணயங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

நிச்சயமாக, சிறந்த கவனிப்பை வழங்கும் மனதிற்கு இதமான சூழல்களைக் கொண்ட உங்களை அன்புடன் வரவேற்கும் இல்ல வசதிகள் சில உள்ளன.

What makes this feel like a home is, instead of living at home on your own, you're just living with one great big family. Benefits of that are I'm no longer lonely. The social benefits are enormous. I'm outside doing quite a bit of work in the workshop, which helps a lot.

மற்றவர்களோடு நீங்கள் சேர்ந்து வாழ்வதால் தனியாக வாழ்கிறோம் என்ற உணர்வு இல்லாமல் ஒரு பெரிய குடும்பத்தோடு சேர்ந்து வாழும் உணர்வு உங்களுக்கு இருக்கும். தனித்துவிட்டோம் என்ற உணர்வு இல்லாமல் இருப்பது பெரும் பலனாகும். கிடைக்கும் சமூகப் பலன்கள் அபாரமானவை. இங்குள்ள பட்டறையில் நான் சிறிது வேலையும் செய்வது எனக்கு மிகவும் நல்லதாக இருக்கிறது.

There are many things to consider in planning your future as you age. It is important to keep healthy and fit, be informed about aged care services, and plan ahead.

வயது கூடிக்கொண்டு போவதால் எதிர்காலத் திட்டத்தைப் பற்றி யோசிக்கும்போது பல விடயங்களை நீங்கள் கருத்தில் கொள்ளவேண்டும். ஆரோக்கியமாக இருக்கவேண்டியதும் முதியோர் கவனிப்பு வசதிகளைப் பற்றித் தெரிந்துகொள்வதும், முன்கூட்டியே திட்டமிடுவதும் அவசியம்.

To learn more about ageing and aged care services, visit My Aged Care, or call the contact centre on 1800 200 422.

வயது முதிர்வு மற்றும் முதியோர் இல்லச் சேவைகளைப் பற்றி மேலும் தெரிந்துகொள்ள My Aged Care - க்குச் செல்லுங்கள், அல்லது 1800 200 422 -இல் தொடர்பு மையத்தை அழையுங்கள்.

For more information, visit www.BETTERHEALTH.vic.gov.au/agedcare

மேலதிகத் தகவல்களுக்கு: www.BETTERHEALTH.vic.gov.au/agedcare



Aged care services © Copyright State of Victoria 2017